உங்கள் அபிமான
தினதமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 24.07.2026 • மலர் 04 • இதழ்: 205 • வெள்ளிக்கிழமை • Edition : Nagercoil • 24.07.2026 • Vol : 04 • Issue : 205 • Page : 4 • Rs. 5/-

# இளைஞர்கள் எதிகாலத்துடன் விளையாடுபவர்கள் தப்ப முடியாது

## பிரதமர் மோடி உறுதி



டெல்லி, ஜூலை 24

'நீட்' முறைகேடு தொடர்பாக மத்திய மந்திரி தர்மேந்திர பிரதான் பதவி விலகக்கோரி டெல்லி ஜந்தர் மந்தரில் கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்த விவகாரத்தை முன்வைத்து நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அமளியில் ஈடுபட்டு வருகிறார்கள். இதையடுத்து 'நீட்' விவகாரம் குறித்து விவாதிக்க தயாராக இருப்பதாக மத்திய அரசு தெரிவித்தது.

இந்த நிலையில், பிரதமர் மோடி முதல் முறையாக இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ளார். பிரதமர் மோடி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது: "நமது இளைஞர்களின் நலனையும், அவர்களின் எதிர்காலத்தையும் விட முக்கியமானது வேறு எதுவும் இல்லை. வினாத்தாள் கசிவு சம்பவங்களில் தொடர்புடையவர்களுக்கு விரைவாகவும் கடுமையாகவும் தண்டனை வழங்கும் வகையில், விரைவு நீதிமன்றங்களை அமைக்க முடிவு செய்துள்ளோம்.

இதற்கான அனைத்து அவசியமான நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அலுவலர்களுக்கும் உத்தரவிட்டுள்ளேன். மாணவர்களின் நலனையும் அவர்களின் எதிர்காலத்தையும் பாதுகாக்க அரசு தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. நமது இளைஞர்களின் எதிர்காலத்தை பாதிக்க முயற்சிப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் ஒருபோதும் தப்பிக்க முடியாது" என்று தெரிவித்துள்ளார்



## நாகர்கோவில் இந்து கல்லூரி முன்பு
## மத்திய அரசை கண்டித்து மூட்டா அமைப்பினர் வாயிற் முழக்க ஆர்ப்பாட்டம்

நாகர்கோவில் ஜூலை 24

கன்னியாகுமரிமாவட்டம்நாகர்கோவில் இந்துகல்லூரிமுன்புமூட்டாஅமைப்பினர் மதிய நேர இடைவேளையில் மூட்ட்டா மத்திய பொருளாளர் ராஜ ஜெயசேகர் தலைமையில் வாயிற் முழக்க ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள்உள்ளிட்ட50க்கும்மேற்பட்ட கலந்து கொண்டனர் மேலும் இந்த ஆர்ப்பாட்டத்தில்மத்தியஅரசைகண்டித்து கோஷங்களை எழுப்பினர்,நீட் தேர்வை நிறுத்த செய்ய வேண்டும், நீட் தேர்வு வினாத்தாள் கசிவு முறைகேடை விசாரிக்க வேண்டும்,NTA அமைப்பு நடத்துகின்ற தேர்வுதடைச்செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர் மேலும் டெல்லியில்போராட்டத்தில்ஈடுபட்டுள்ள காக்ரோச் ஜனதா பார்ட்டி அமைப்பு மற்றும் மாணவர் அமைப்புகளை கைது செய்து தாக்குதல் நடத்தியதை கண்டித்தும் மத்தியகல்வித்துறைஅமைச்சர்தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் மூட்டா அமைப்பினர் மற்றும் மாணவர்களுடன் இணைந்து போராட்டத்திலும் ஈடுப்பட்டதாகவும் தெரிவித்தார்,அதேபோன்று தமிழக முழுவதும் மூட்டா அமைப்பு அந்தந்த கல்லூரி முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகவும் தெரிவித்துள்ளார். இதில் TANTSAC கிளை தோழர் திருவாழி மார்பன் கலந்து கொண்டார்

மத்திய இணை பொதுச்செயலாளர் தோழர் ஷைலா குமாரி மற்றும் கிளை பொருளாளர் சுப்பையா போராட்ட விளக்கவுரை நிகழ்த்தினார்.

இந்திய மாணவர் சங்க மாவட்ட செயலாளர் சந்துரு சிறப்புரையாற்றினார்,

கல்விக் குழு ஒருங்கினைப்பாளர் பொன்முருகராஜ் நன்றியுரை வழங்கினார்.

ஆர்ப்பாட்டத்தில் பேராசிரியர்கள்,

அலுவலர்கள், இந்திய மாணவர் சங்க பொறுப்பாளர்கள் , கல்லூரி மாணவ மாணவியர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## பள்ளி காலை உ ணவுத் திட்டத்திற்கு காமராஜர் பெயர் விஜய் வசந்த் எம்.பி தமிழக முதல்வருக்கு நன்றி

நாகர்கோவில், ஜூலை.24

தமிழ்நாடு அரசின் பள்ளி மாணவர்களுக்கான காலை உணவு திட்டத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் பெயரை சூட்ட அரசு முடிவு செய்திருப்பதற்கு கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றியினை தெரிவித்துள்ளார். அவர் கூறியிருப்பதாவது:

பெருந்தலைவர் காமராஜர் தமிழ்நாட்டின் கல்வி வரலாற்றில் அழியாத முத்திரை பதித்த மாபெரும் தலைவர். ஒரு குழந்தை கூட வறுமையால் பள்ளிக்குச் செல்லாமல் இருக்கக் கூடாது; பசியால் கல்வியை இழக்கக் கூடாது' என்ற உயரிய நோக்கத்துடன், 1950களில் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் ஏழை மாணவர்களுக்காக பள்ளிகளில் மதிய உணவுத் திட்டத்தை விரிவுபடுத்தி செயல்படுத்தினார். கல்வி என்பது அனைவருக்கும் சமமாக கிடைக்க வேண்டும் என்ற அவரது தொலைநோக்குப் பார்வையின் வெளிப்பாடாகவே அந்தத் திட்டம் அமைந்தது. அந்த மதிய உணவுத் திட்டம் மாணவர்களின் வயிற்றுப் பசியை போக்கியது மட்டுமல்ல; கல்விக்கான பசியையும் தீர்த்தது. பள்ளி இடைநிற்றல் கணிசமாகக் குறைந்தது. ஏழை மற்றும் கிராமப்புற மாணவர்களின் பள்ளிச்சேர்க்கை அதிகரித்தது. கல்வி என்பது வசதியுள்ளவர்களின் உரிமை அல்ல, அனைவருக்கும் உரிய அடிப்படை உரிமை என்ற சமூகநீதிக் கொள்கையை நடைமுறைப்படுத்திய புரட்சிகரமான திட்டமாக அது விளங்கியது. இன்று அதே மனிதநேயப் பாரம்பரியத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில், பள்ளி மாணவர்களுக்கான காலை உணவுத் திட்டத்திற்கு 'பெருந்தலைவர் காமராஜர்' பெயரைச் சூட்டியிருப்பது மிகவும் பொருத்தமான, வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவாகும். மாணவர்களின் நலனுக்காக உணவையும் கல்வியையும் இணைத்த அவரது சிந்தனைக்கு இதைவிடச் சிறந்த அங்கீகாரம் இருக்க முடியாது.

இதற்காக தமிழ்நாடு அரசுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய்க்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். காமராஜர் விதைத்த கல்விப் புரட்சி என்றென்றும் நிலைத்திருக்கும். அந்தப் புரட்சியின் தொடர்ச்சியாகவே காலை உணவுத் திட்டத்திற்கு அவரது பெயர் சூட்டப்பட்டிருப்பது வரலாற்றுக்கும், கல்விக்கும், சமூகநீதிக்கும் வழங்கப்பட்ட மிகச் சிறந்த மரியாதையாகும். என கூறியுள்ளார்.



## தஞ்சாவூரில் முதலமைச்சர் படிப்பகம் கட்டுமான பணி: கலெக்டர் ஆய்வு

தஞ்சாவூர் ஜூலை 24

தஞ்சாவூரில் ரூபாய் 3 கோடியில் முதலமைச்சர் படிப்பகம் கட்டுமானபணி நடைபெறுவதை கலெக்டர் ரேவதி பார்வையிட்டு ஆய்வு செய்தார்

தஞ்சாவூர் மாநகராட்சி பகுதியில் உள்ள முனிசிபல் காலனி பகுதி யில் கல்வி நிதித்திட்டம் 2025 26ன் கீழ்ரூபாய் 3.05 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் முதலமைச் சர் படிப்பகம் கட்டுமானப் பணிகளை கலெக்டர் ரேவதி பார்வையிட் டு ஆய்வு செய்தார். இந்த கட்டிடத் தின் தரைத் தளத்தில் மென் பொரு ள் உள்ளிட்ட பல்வேறு துறைகளை சேர்ந்த நிறுவனங்கள் செயல்படுவ தற்காக 38 பேர் பணியாற்றும் வசதியுடன் இருக்கைகள், மேஜை கள் மற்றும் ஆலோசனை கூடங்கள், தேவையான உள்கட்டமைப்பு வசதி கள் அமைக்கப்பட உள்ளன

முதல் தளத்தில் டி.என்.பி. எஸ். சி,

யு.பி.எஸ்.சி.,ஆர் ஆர்.பி, நீட் உள்ளி ட்ட போட்டி தேர்வுகளுக்கு தயாரா கும் மாணவர்கள் மற்றும் இளைஞர் களுக்காக போட்டி தேர்வுக்கான நூல்கள் கிடைக்கும் வகையில் கல்வி மையம் அமைக்கப்பட உள்ளது.மேலும்மூன்றாவதுதளத்தில்உணவுஅருந்தும் கூடம் அமைக்க ப்பட உள்ளது.

இந்த ஆய்வின்போது மேற் கொள்ளப்பட்டு வரும் அனைத்து பணிகளையும் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் உயர்தரத்துட ன் முடித்து, பொது மக்களின் பயன் பாட்டிற்கு கொண்டு வருமாறும் மேலும் இம்மையத்திற்கு பொது மக்கள் மற்றும் இளைஞர்கள் அதிக அளவில் வருகை தரவுள்ளதை முன்னிட்டு அவர்களுக்கு தேவை யான குடிநீர் ,கழிவறை, மின்வசதி இணைய வசதி, வாகன நிறுத்துமிடம் உள்ளிட்ட அனைத்து

அடிப்படை வசதிகளையும் முழுமை யாக ஏற்படுத்தி தருமாறு தொடர்பு டைய அலுவலர்களுக்கு கலெக்டர் அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு உரிமைகள் திட்ட உலக வங்கி நிதி உதவியுடன் கல்லுக்குளம் மாநகராட்சி ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் செயல்படும் விழுதுகள் ஒருங்கிணைந்த சேவை மையத்தையும் கலெக்டர் பார்வை யிட்டு ஆய்வு செய்தார். மேலும் பொதுப்பணி துறை சார்பில் பழைய கோர்ட்டு வளாகத்தில் மாதிரி பள்ளி செயல்படும் வகை யில் ரூபாய் 50 லட்சத்தில் மேற் கொள்ளப்பட்டுள்ள புனரமைப்பு பணிகளை கலெக்டர் பார்வையி ட்டார்

பின்னர் தஞ்சாவூர் மண்டல நுகர் பொருள் வாணிபக் கழக முதுநி லை மேலாளர் அலுவலக கூட்டரங் கில் நடைபெற்ற நெல் கொள்முதல் மற்றும் இயக்க பணிகள் குறித்த ஆய்வு கூட்டத்திலும் கலெக்டர் கலந்து கொண்டார்

இதில் நுகர்பொருள் வாணிப கழக முது நிலை மண்டல மேலாளர் செல்வம், தஞ்சாவூர் மாநகராட்சி (பொறுப்பு) மணிகண்டன் முதன் மை கல்வி அலுவலர் பேபி, மாற்று த் திறனாளிகள் நல அலுவலர் உலக நாதன், பொதுப்பணிதுறை செயற்பொறியாளர் நாகவேலு, உதவி செயற்பொறியாளர் ரகு, தஞ்சாவூர் தாசில்தார் மூர்த்தி, உதவி பொறியாளர் ஹரிஹர சுதன், மாநகராட்சி பொறியாளர் மோகன், உதவி நிர்வாக பொறி யாளர் பிரதான் பாபு மற்றும் பலர் கலந்து கொண்டனர்




## நாகர்கோவிலில் கோரிக்கைகளை வலியுறுத்தி மாற்றுத்திறனாளிகள் ஆர்ப்பாட்டம்

நாகர்கோவில், ஜூலை. 24

குமரி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அமைப்பு சார்பில் நாகர்கோவில், வேப்பமூடு சந்திப்பில் கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஒருவருக்கு 7 கிலோ அரிசி என்கிற புதிய தேசியஉணவுபாதுகாப்புசட்டதிருத்தத்தை ரத்து செய்ய வேண்டும், அந்தியோதயா அன்னை யோஜனா திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகள் உள்ள அனைத்து ஏழை குடும்பங்களுக்கும் மாதம் 35 கிலோ அரிசி வழங்கப்படுவது உறுதி செய்ய வேண்டும், ஆண்டு வருமானம் 3 லட்சத்திற்கும் குறைவாக உள்ள அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் ஏஏஒய் குடும்ப அட்டை மூலம் மாதம் 35 கிலோ அரிசி வழங்க வேண்டும், மாற்று திறனாளிகளுக்கு வீடு தேடி உணவு வழங்கும் திட்டத்தை நாடு முழுவதும் அமல் படுத்த வேண்டும், ஆர்.பி.டபிள்யூ.டி சட்டம் 2016 ன் படி மாற்றுத்திறனாளிகள் கண்ணியமான வாழ்க்கை, உணவு உரிமை அரசு உறுதி செய்ய வேண்டும், கூடுதல் உறுப்பினர்களைக் கொண்ட மாற்றுத்திறனாளிகளின் குடும்பங்களுக்கு தேவைக்கேற்ப கூடுதல் உணவு தானியங்களை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டன.

ஆர்ப்பாட்டத்திற்கு நாகர்கோவில் மாநகராட்சி நியமன உறுப்பினரும், மாவட்ட இணைச் செயலாளருமான அருள் தலைமை தாங்கினார். மாநகர செயலா ளர் வெற்றிவேல் அருள் குமரேசன், குழித்துறை நகராட்சி உறுப்பினர் ரவி, மிக்கேல் நாயகி, தமிழ்செல்வன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில துணைத்தலைவர் முருகன், மாவட்ட செயலாளர் வில்சன், மாவட்ட குழ உறுப்பினர் சார்லஸ், சாந்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## தலைமை ஆசிரியர்களுக்கான சிறப்பு பயிலரங்கு: ஆட்சித்தலைவர் பங்கேற்பு



நாகர்கோவில்,ஜூலை. 24

கன்னியாகுமரி மாவட்ட பள்ளிகல்வித்துறையின் சார்பில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கான சிறப்பு பயிலரங்க நிகழ்ச்சி நடைபெற்றது. நாகர்கோவில் மாவட்ட ஆட்சியர்அலுவலகவருவாய்கூட்டரங்கில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். தொடர்ந்து தலைமையாசிரியர்களிடையே கலந்துரையாடி கூறியதாவது:

மாவட்டத்திற்குட்பட்ட அரசு மற்றும் அரசு உதவிபெறும் தலைமை ஆசிரியர்களுக்கான சிறப்பு பயிலரங்க நடைபெற்றது. பள்ளியின் வளர்ச்சிக்குத் தலைமை ஆசிரியர்களே தூணாக விளங்குகிறார்கள். ஒரு பள்ளியின் தரம் உயருவது தலைமை ஆசிரியரின் நிர்வாகத் திறமையைப் பொறுத்தே அமைகிறது. எனவே, தலைமை ஆசிரியர்கள் மாணவர்கள், சக ஆசிரியர்கள், பெற்றோர் ஆசிரியர் சங்கம் மற்றும் முன்னாள் மாணவர்களுடனும் நல்லுறவை பேண வேண்டும்.

தற்போதைய காலகட்டத்தில் சமூக ஊடகங்கத்தின் வாயிலாக மாணவர்கள் கல்வி தொடர்பான மற்றும் சினிமா தொடர்பான விஷயங்கள் என அனைத்தையும் 30 விநாடி, 1 நிமிடத்திற்குள் கற்றுக்கொள்கிறார்கள்.

எனவே தற்போதைய மாணவர்கள் குறுகிய நேரத்திலேயே விஷயங்களைப் புரிந்து கொள்ள விரும்புவதால், ஆசிரியர்களும் இந்த மாற்றத்திற்கு ஏற்பத் தங்களின் கற்பித்தல் முறைகளை மாற்றி, மாணவர்களுக்கு புரிந்துகொள்ளும் வகையில் கற்பித்தல் வேண்டும்.

தமிழ்நாடு பள்ளிகல்வித்துறை சார்பில் ஸ்டீம் என்ற கல்வி முறையை அறிமுகப்படுத்தியுள்ளார்கள். இந்த கல்வி முறையின் மூலம் மாணவர்களின் படைப்பாற்றல் மற்றும் தனித்திறன்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து ஊக்குவிக்க வேண்டும். இவ்வாறு கூறினார்.

நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பிரின்ஸ் ஆரோக்கிய ராஜ், மாவட்ட கல்வி அலுவலர்கள், அரசு மற்றும் அரசு உதவிபெறும் தலைமையாசிரியர்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# ஸ்டெம் செல் மாற்று அறுவை சிகிச்சைக்கு இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, அரிய இரத்த நோயால் பாதிக்கப்பட்டவர் தனது நன்கொடையாளரை சந்தித்தார்




சென்னை, ஜூலை 22: இதயத்தைத் தொடும் ஒரு கதையில், சென்னையைச் சேர்ந்த 40 வயதான ஒருவர், கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக ஒரு அரிய மற்றும் உயிருக்கு ஆபத்தான இரத்த நோயிலிருந்து அவரை காப்பாற்றிய அவரது ஸ்டெம் செல் நன்கொடையாளரைச் சந்தித்தார். இரத்த புற்றுநோய் மற்றும் தலசீமியா மற்றும் அப்ளாஸ்டிக் அனீமியா போன்ற பிற இரத்தக் கோளாறுகளுக்கு எதிரான போராட்டத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட இலாப நோக்கற்ற அமைப்பான டிகேஎம்எஸ் ஃபவுண்டேஷன் இண்டியா, நன்கொடையாளரை கண்டுபிடிப்பதில் உதவியது.

உயிர்பிழைத்தவரான, சாமனுஜான், ஒரு மார்கெட்டிங் மேனேஜராக பணி செய்து வருகிறார், 2017 முதல் விவரிக்கப்படாத உயர் காய்ச்சல், வீக்கம், தடிப்புகள் மற்றும் கடுமையான சோர்வு ஆகியவற்றால் அவதிப்பட்டு வந்திருக்கிறார். பல முறை மருத்துவமனைக்குச் சென்ற போதிலும், பல ஆண்டுகளாக அவதிப்படுவதற்கான சரியான காரணம் தீர்மானிக்கப்படவில்லை. ஜனவரி 2022 ல் அவரது இரத்த பிளேட்லெட் எண்ணிக்கை ஆபத்தான அளவில் குறைந்தபோது, அவர் ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்குச் (ஆர்ஜிஜிஜிஎச்) கொண்டு செல்லப்பட்டார். பின்னர் அவருக்கு கடுமையான அப்ளாஸ்டிக் அனிமியா கண்டறியப்பட்டது, இது எலும்பு மஜ்ஜை போதுமான பிளேட்லெட்டுகள், சிவப்பு இரத்த அணுக்கள் மற்றும் வெள்ளை இரத்த அணுக்களை உற்பத்திசெய்வதைநிறுத்தும் ஒரு நிலை ஆகும்.

நோயாளியைக் காப்பாற்றஸ்டெம் செல் மாற்று அறுவை சிகிச்சை சிறந்த தீர்வாக இருப்பதால், அது இல்லாமல் நோயாளி இறக்கக்கூடும், மருத்துவ குழு பொருத்தமான நன்கொடையாளரைத் தேடத் தொடங்கியது. அவரது குடும்பத்திலும் நண்பர்கள் வட்டத்திலும் யாரும் சரியாக பொருந்தவில்லை. 18 நீண்ட மாதங்களுக்குப் பிறகு, புதுதில்லியில் வசிக்கும் 25 வயதான பரிதோஷ் மிச் சரியாக பொருந்துகிறார் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, சென்னைமருத்துவக்கல்லூரி/ஆர்ஜிஜிஜிஎச் யில் இரத்த புற்றுநோய் நிபுணரும் மற்றும் எலும்பு மஜ்ஜை மாற்று மருத்துவருமான டாக்டர் அருணா ராஜேந்திரன் தலைமையிலான குழு, இயல்பான இரத்த அணுக்களின் உற்பத்தியை மீட்டெடுக்க மாற்று அறுவை சிகிச்சை மேற்கொண்டது.

சாம்னு பின்னர் முழுமையாக குணமடைந்து, ஒரு மார்கெட்டிங் மேனேஜராக அவரது பணியை மீண்டும் தொடங்கினார். 18 முதல் 55 வயதுக்குட்பட்ட நபர்கள் மற்றும் ஏற்கனவே பதிவு செய்யப்படாதவர்கள் இரத்த ஸ்டெம் செல் நன்கொடையாளர்களாக பதிவு செய்ய தகுதியுடையவர்கள். <https://www.dkmsindia.org/registernow> ல் பதிவு செய்யுங்கள்.

# திருச்சி, மணப்பாறை: வாரிசு சான்றிதழ் வழங்க லஞ்சம் பெற்ற முதுநிலை வருவாய் ஆய்வாளர் கைது :



திருச்சி, ஜூலை 24

திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டத்திற்குட்பட்ட வி.பெரியப்பட்டி பிர்கா முதுநிலை வருவாய் ஆய்வாளர் ஹேமலதா, வாரிசு சான்றிதழ் வழங்குவதற்காக ரூ.4,000 லஞ்சம் பெற்றபோது, திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை (DVAC) அதிகாரிகளால் கையும் களவுமாக கைது செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், பாம்பாட்டிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த ஈஸ்வரி (30) என்பவரின் தந்தை கருப்பசாமி சமீபத்தில் உயிரிழந்தார். இதையடுத்து, வாரிசு சான்றிதழ் பெறுவதற்காக அவர் அரசு இசேவை மையம் மூலம் விண்ணப்பித்திருந்தார்.

இந்த மனு தொடர்பாக வி.பெரியப்பட்டி பிர்கா முதுநிலை வருவாய் ஆய்வாளர் ஹேமலதாவை அணுகியபோது, மனுவை விரைந்து பரிசீலித்து சான்றிதழ் வழங்குவதற்காக முதலில் ரூ.5,000 லஞ்சம் கோரியதாக கூறப்படுகிறது. பின்னர், புகார்தாரரின் வேண்டுகோளின் பேரில் ரூ.4,000 ஆக குறைத்து கேட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லஞ்சம் வழங்க விருப்பமில்லாத ஈஸ்வரி, ஜூலை 20 ஆம் தேதி திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையில் எழுத்துப்பூர்வமாக புகார் அளித்தார். புகாரை ஆய்வு செய்த அதிகாரிகள், வழக்குப்பதிவு செய்து, லஞ்ச ஒழிப்பு பொறி வைப்பு நடவடிக்கைக்கு திட்டமிட்டனர்.

அதன்படி, திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையின் காவல் துணைக் கண்காணிப்பாளர் மணிகண்டன் தலைமையில், காவல் ஆய்வாளர்கள் பிரசன்ன வெங்கடேஷ், சேவியர் ராணி மற்றும் தனிப் படை அதிகாரிகள் இணைந்து வி.பெரியப்பட்டி பிர்கா அலுவலகத்தில் பொறி வைப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

அப்போது, புகார்தாரரிடம் இருந்து ரூ.4,000 லஞ்சத் தொகையை ஹேமலதா பெற்றுக்கொண்ட உடனேயே, அதிகாரிகள் அவரை கையும் களவுமாக பிடித்து கைது செய்தனர். லஞ்சமாக பெறப்பட்ட பணமும் அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, மணப்பாறை வட்டம் வி.பெரியப்பட்டி வருவாய்த்துறை அலுவலகத்தில் அதிகாரிகள் தீவிர விசாரணை மேற்கொண்டனர். கைது செய்யப்பட்ட ஹேமலதாவிடம் விசாரணை நடத்தப்பட்டு, சட்டப்பூர்வ நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. மேலும் அவரது இல்லத்திலும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு போலீசார் சோதனை நடத்தினர். இந்த சம்பவம் வருவாய்த்துறையில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளதுடன், அரசு அலுவலகங்களில் லஞ்சம் கோரும் அதிகாரிகள் மீது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை தொடர்ந்து கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



## கிருஷ்ணகிரியில்

# நடிகர் சூர்யா 51வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாபெரும் இரத்ததான முகாம்: அன்னதானம்

கிருஷ்ணகிரி, ஜூலை 23:

நடிகர் சூர்யாவின் 51வது பிறந்தநாளை முன்னிட்டு, கிருஷ்ணகிரியில் இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி மற்றும் ரோட்டரி கிளப் இணைந்து மாபெரும் இரத்ததான முகாமை சிறப்பாக நடத்தினர். சமூக நலன் மற்றும் மனிதநேயத்தை முன்னிறுத்தும் வகையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் ஏராளமான ரசிகர்கள் மற்றும் பொதுமக்கள் உற்சாகமாக பங்கேற்றனர்.

நிகழ்ச்சிக்கு இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டியின் மாவட்ட செயலாளர் செந்தில்குமார் தலைமை தாங்கினார். மாவட்ட சேர்மன் செபஸ்டின், வெங்கட்ராமன் மற்றும்ரோட்டரிசங்கத்தலைவர்விஸ்வநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நடிகர் சூர்யாவின் பிறந்தநாளை முன்னிட்டு, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட ரசிகர் மன்றத்தின் சார்பில் மாவட்ட பொறுப்பாளர்கள் திருமால் ராஜதுரை, குழலரசன் மற்றும் ஊத்தங்கரை ஒன்றிய தலைவர் சுதாகர், ஆகியோரின் தலைமையில் விழா வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

மேலும், ஒன்றிய மற்றும் நகர மன்ற நிர்வாகிகளான சந்தோஷ்,அஜய், தர்மேந்திரன், தீபக் ஆகியோரும், ரசிகர் மன்ற நிர்வாகிகளான தர்மதுரை, அன்புதுரை, சூர்யா உள்ளிட்டோரும் நிகழ்ச்சியில் முன்னிலை வகித்தனர். இரத்ததான முகாமில் ஏராளமான ரசிகர் மன்ற நிர்வாகிகள் மற்றும் இளைஞர்கள் தன்னார்வத்துடன் இரத்ததானம் செய்து மனிதநேயப் பணியில் பங்கேற்றனர். பின்னர் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

இரத்ததானம் வழங்கிய அனைத்து தன்னார்வலர்களுக்கும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. சமூகப் பொறுப்புணர்வை வெளிப்படுத்தும் வகையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சி, பொதுமக்கள் மற்றும் ரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.



# கன்னியாகுமரி கடலில் படகுகள் மூலம் போலீசார் பாதுகாப்பு ஒத்திகை

கன்னியாகுமரி, ஜூலை.24

தமிழக கடலோர பகு தியில் உள்ள மாவட்டங்களில் கடல் வழியாக படகு மூலம் தீவிரவாதிகள் ஊடுரு வலை தடுக்க ஆண்டுதோறும் கடலில் படகு மூலம் போலீசார் பாதுகாப்பு ஒத்திகை நடத்துவது வழக்கம்.

அதேபோல இந்த ஆண்டு தமிழ்நாடு கடலோர பாதுகாப்பு போலீசார் இந்திய கடலோர காவல் படை இந்திய கடற்படை மீன்வளத்துறை மற்றும் உள்ளூர் போலீசார் இணைந்து நேற்று முதல் தமிழகத்தின் கடலோர பகுதியில் "சாகர்கவாச் ஆபரேஷன்"என்ற பாதுகாப்பு ஒத்திகையை நடத்தி வருகின்றனர்.

அந்த வகையில் தமிழ்நாடு கடலோர மாவட்டங்களான திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு, விழுப்புரம், நாகை, நெல்லை, கன்னியாகுமரி, தூத்துக்குடி உள்பட 13 கடலோரமாவட்டங்களில்இந்தியகப்பல்படைதமிழ்நாடு கடலோர பாதுகாப்பு குழுமபோலீசார் இந்திய கடலோர காவல் படை மீன்வளத்துறை மற்றும் உள்ளூர் போலீசார் இணைந்து கடல் பகுதியில் "சாகர் கவாச் ஆப்ரேஷன்" என்ற பாதுகாப்பு ஒத்திகையை நேற்று (வியாழக்கிழமை) காலை 6 மணி முதல் நடத்தி வருகிறார்கள். இந்த பாதுகாப்பு ஒத்திகை நிகழ்ச்சி இன்று(வெள்ளிக்கிழமை) இரவு 8 மணி வரை தொடர்ந்து நடக்கிறது. இந்த பாதுகாப்பு ஒத்திகையில் தமிழ்நாடு கடலோர பாதுகாப்பு குழும போலீசார் மற்றும் உள்ளூர் போலீசார் ஈடுபட்டு உள்ளனர். இது தவிர இந்திய கடலோர காவல் படையினரும் ஈடுபட்டுள்ளனர்.

கன்னியாகுமரி கடலோர பாதுகாப்பு குழும போலீஸ் இன்ஸ்பெக்டர் சாந்தி தலைமையில் கடலோர பாதுகாப்பு குழும போலீசார் நெல்லை, குமரி மாவட்டத்தில் உள்ள கடல் பகுதியில் அதிநவீன ரோந்து படகு மூலம் நேற்று காலை 6 மணி முதல் பாதுகாப்பு ஒத்திகை நடத்தி வருகிறார்கள்.

கன்னியாகுமரி அருகே உள்ள ஆரோக்கியபுரம் முதல் நீரோடி வரையிலான கடல் பகுதியில் படகு மூலம் சென்று தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த பாதுகாப்பு ஒத்திகை தொடர்ந்து நடந்து வருகிறது. 106 கிலோ மீட்டர் தூரம் உள்ள 48 கடற்கரை கிராமங்களிலும் வாகனங்களில் ரோந்து சென்று போலீசார் தீவிர கண்காணிப்பு பணிக ளில் ஈடுபட்டு வருகிறார்கள். 10க்கும் மேற்பட்ட சோதனை சாவடிகளில் வாகன சோதனை நடத்தி வருகிறார்கள்.



# மகளிர் சுய உதவிக் குழுக்களின் புதிய படிக்கட்டு" என்கிற நூல் வெளியீட்டு விழா

கோவை ஜூலை:24

சுய உதவி எழுத்தாளர் பாரதி சின்னச்சாமி எழுதிய "எல்லாருக்கும் எல்லாமும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் புதிய படிக்கட்டு" என்கிற நூல் கோவை கொடிசியா வளாகத்தில் நடைபெற்று வரும் 2026 புத்தகத் திருவிழாவில் 'வேரல் அரங்கில்' வெளியிடப்பட்டது.

இந்த நூல் பற்றி நூலாசிரியர் பாரதி சின்னச்சாமி ஆற்றிய உரையில் தெரிவித்ததாவது,எனது இந்த நூலில் உலகத்துக்கே காய்கறிகள் இலவசம் என்கிற ஒரு முக்கியமான கட்டுரை இடம் பெற்றுள்ளது. மேலும் பெண்களின் பாதுகாப்பை பெண்களே எவ்வாறு உறுதிப்படுத்துவது? என்ற கட்டுரையும், ஜென்சி இளைஞர்களை சமூகத்திற்கு ஆக்கப்பூர்வமான பணியாற்ற கிராம விலையில்லா காய்கறி தோட்டங்கள் எவ்வாறு முக்கிய பங்காற்றுகின்றன என்பது பற்றிய முக்கியமான கட்டுரைகளும் இந்த நூலில் இடம் பெற்றுள்ளன.

அரசாங்கங்கள் பெண்களுக்கு மாதம் 1,000 ரூபாய், 2000 ரூபாய் இலவசப் பணம் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன.

ஆனால், குடும்பங்களின் வறுமையை ஒழிப்பதில் இந்த இலவச பணம் வழங்கும் திட்டம் வெற்றி பெறவில்லை. அது ஒரு மானிய திட்டமாகவே, ஒரு நுகர்வு திட்டமாகவே உள்ளது.இந்த திட்டத்திற்கு மாற்றாக அரசாங்கங்கள் கிராம புறம்போக்கு நிலங்களில் மகளிர் சுய உதவிக் குழு பெண்களுக்கு கிராமத்துக்கு ஒரு காய்கறி தோட்டத்தை அமைத்துத் தந்தால், அவர்கள் குடும்பங்களின் வறுமையையும், கிராமத்தின் உணவு வறுமையையும், இந்தியாவில் ஊட்டச்சத்து உணவு பற்றாக்குறை பிரச்சனையும் நிச்சயமாக ஒழித்துக் காட்டுவார்கள்.

50 குடும்பங்கள் கொண்ட ஒரு கிராமத்தில் வீணாக, தரிசாக கிடக்கும் கிராம புறம்போக்கு நிலங்களில் 30 முருங்கை மரங்களை நடவு செய்து வளர்த்தால் போதும். அந்த கிராமத்தில் உள்ள எல்லா குடும்பங்களும் முருங்கைக் கீரையில் வாழ்நாள் முழுவதும் விலையின்றி இலவசமாகவே தன்னிறைவு அடைய முடியும். அதேபோல, அந்த கிராமத் தோட்டத்தில் 30 பப்பாளி மரங்கள், 20 கொய்யா செடிகள், 10 மா மரங்கள் என மேலும் 60 செடிகளை மட்டுமே நடவு செய்து வளர்த்தால் போதும். அந்த கிராமத்தில் உள்ள 50 குடும்பங்களும் பப்பாளி பழங்கள், கொய்யாப்பழங்கள் மற்றும் மாம்பழங்களை விலையின்றி இலவசமாகவே பெற்று தன்னிறைவு அடைய முடியும். இது குறித்து எனது "எல்லாருக்கும் எல்லாமும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் புதிய படிக்கட்டு" என்ற இந்த நூலில் விரிவாக விளக்கி உள்ளேன் என்றார்.




# காவேரி மருத்துவமனையின் புதிய முன்னெடுப்பு சென்னையில் பல்துறை ரோபோடிக் அறுவை சிகிச்சைக்கு ஒருங்கிணைந்த திட்டம்

சென்னை, ஜூலை 24

உயர் சிகிச்சைக்கு இந்நாட்டில் புகழ்பெற்ற காவேரி மருத்துவமனை குழுமம், 'காவேரி 3X சென்னை' என்ற பெயரில் ஒருங்கிணைந்த ரோபோட்டிக் அறுவைசிகிச்சை திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் மேம்பட்ட ரோபோட்டிக் தொழில்நுட்பம், விரிவான அறுவைசிகிச்சை நிபுணத்துவம் மற்றும் அதிக திறன் கொண்ட பல்துறை மருத்துவக் குழுக்களை சென்னையில் உள்ள அதன் மூன்று மருத்துவமனைகளிலும் சீரான உயர்தர சிகிச்சை வழிகாட்டுதல்களின் கீழ் ஒன்றிணைக்கிறது.

இந்த ரோபோட்டிக் அறுவைசிகிச்சை திட்டங்கள், உலகின் மிக மேம்பட்ட தொழில்நுட்பங்களில் ஒன்றான 4ஆம் தலைமுறை டாவின்சி ரோபோட்டிக் அறுவைசிகிச்சை சாதனத்தின் அடிப்படையில் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் இரையக குடலியல், புற்றுநோயியல், சிறுநீர்பாதையியல், மகப்பேறு மற்றும் மகளிர் நோயியல், மற்றும் சிறுநீரக மருத்துவவியல் உள்ளிட்ட பல மருத்துவத் துறைகளில் ரோபோட்டிக் சாதனஉதவியுடன்சிகிச்சையளிக்கப்படும்.

இந்நிகழ்ச்சியில் காவேரி மருத்துவமனைகள் குழுமத்தின் இணை நிறுவனரும், செயல் இயக்குநருமான டாக்டர். அரவிந்தன் செல்வராஜ் அவர்கள் பேசுகையில், "'காவேரி 3X சென்னை' திட்டத்தின் மூலம், மேம்பட்ட தொழில்நுட்பம், பல்துறை நிபுணத்துவம் மற்றும் சீரான உயர்தர சிகிச்சை ஆகியவற்றை சென்னையில் உள்ள எங்களது மூன்று மருத்துவமனைகளிலும் ஒன்றிணைத்து, ஒரு முழுமையான ரோபோட்டிக் அறுவைசிகிச்சை சூழல் அமைப்பை நாங்கள் உருவாக்கி செயல்படுத்துகிறோம். காவேரி மருத்துவமனைக்கே உரித்தான உயர்தரம் மற்றும் நிலைத்தன்மையுடன், நோயாளிகள் இனி தங்கள் வீடுகளுக்கு அருகிலேயே அமைந்திருக்கும் எங்களது மூன்று மருத்துவமனைகளில் ஏதாவதொன்றில் சிறப்பான பலன்களை வழங்கும் விரிவான ரோபோட்டிக் சிகிச்சையைப் பெறலாம்.

# திருச்சி, உயர்கல்வித்துறை எதிர்கொண்டு வரும் நிதி நெருக்கடிக்கு ஆக்கப்பூர்வ தீர்வு பாரதிதாசன் பல்கலை. செனட் உறுப்பினர் சுகுமாரன்



திருச்சி, ஜூலை 24

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் உயரிய நிர்வாக அமைப்புகளில் ஒன்றான ஆட்சிப் பேரவை உறுப்பினர்களுக்கான தேர்தலில், 8 மாவட்டங்களைச் சேர்ந்த 16 பேர் போட்டியின்றி ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், அரியலூர், பெரம்பலூர், கரூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய 8 மாவட்டங்களைச் சேர்ந்த பதிவு செய்யப்பட்ட பட்டதாரிகள் வாக்களித்து செனட் உறுப்பினர்களைத் தேர்வு செய்வது வழக்கம். இந்த ஆண்டு கடைசி நேரத்தில் 2 வேட்பாளர்கள் தங்களது வேட்புமனுக்களைத் திரும்பப் பெற்றதைத் தொடர்ந்து, மீதமிருந்த 16 பேரும் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டனர்.

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் (ViceChancellor) தலைமையின் கீழ் செயல்படும் இக்குழுவினர், பல்கலைக்கழகத்தின் புதிய பாடத்திட்டங்களை (Curriculum)ஆய்வுசெய்துபட்டப்படிப்புகளுக்கு அனுமதி வழங்குதல். தகுதியான மாணவர்களுக்கு இளங்கலை, முதுகலை மற்றும் முனைவர் (Ph.D.) பட்டங்கள் மற்றும் கௌரவப் பட்டங்களை (Honorary Degrees) வழங்க ஒப்புதல் அளித்தல், தேர்வுகள் நடத்துதல், மாணவர் சேர்க்கை மற்றும் மாணவர் ஒழுக்க நடவடிக்கைகள் போன்றவற்றுக்கான விதிகளை உருவாக்குதல், பல்கலைக்கழகத்தின் ஆண்டு நிதி நிலை அறிக்கை மற்றும் வளர்ச்சித் திட்டங்களை ஆய்வு செய்து ஒப்புதல் அளித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்த அமைப்பின் உறுப்பினராக போட்டியின்றி தேர்வாகியுள்ளவர்களில் ஒருவரான, பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சுகுமாரன் இதுகுறித்து பேசுகையில்; "மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துதல், ஆசிரியர்களின் நலன், பல்கலைக்கழக வளர்ச்சி, ஆராய்ச்சி மேம்பாடு மற்றும் உயர்கல்வித் துறை எதிர்கொண்டு வரும் நிதி நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் ஆக்கப்பூர்வமான பரிந்துரைகளை செனட் அமைப்பில் முன்வைப்பேன். பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்கும், உயர்கல்வித் துறையின் முன்னேற்றத்திற்கும் முழு அர்ப்பணிப்புடன் செயல்படுவேன்," என்றார்.

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் புதிதாக பொறுப்பேற்ற செனட் உறுப்பினர் சுகுமாரனுக்கு சக உறுப்பினர்கள் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்தனர்.




# நாகர்கோவில் கிம்ஸ் மருத்துவமனையில் பக்கவாத சிகிச்சைப் பிரிவு தொடக்கம்.

நாகர்கோவில், ஜூலை 24

தென் தமிழ்நாட்டில் நரம்பியல் சிகிச்சை சேவைகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், உலக மூளை தினத்தையொட்டி நாகர்கோவில் கிம்ஸ் ஹெல்த் மருத்துவமனையில் முழுமையான பக்கவாத சிகிச்சைப் பிரிவு நேற்று தொடங்கி வைக்கப்பட்டது. பக்கவாத நோயாளிகளுக்கு துரிதமான கண்டறிதல், மேம்பட்ட சிகிச்சை, ஒருங்கிணைந்த பல்துறை மருத்துவ சேவை மற்றும் திட்டமிட்ட மறுவாழ்வு சிகிச்சை மூலம் சிறந்த சிகிச்சைபலன்களைவழங்குவதே இந்தப் பிரிவின் முக்கிய நோக்கமாகும். இந்த புதிய முழுமையான பக்கவாத சிகிச்சைப் பிரிவை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் மு. பிரதாப், திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் டாக்டர்கள் பிரவீன் முரளிதரன், தீபக் விஜயன், நிதா, ஆகியோர் சிறப்பு விருந்தி னர்களாக கலந்து கொண்டனர்.

# தருமபுரி அதிமுக நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம்

## தருமபுரி கிழக்கு மாவட்ட செயலாளர் பேச்சு



தருமபுரி ஜூலை 24

தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி மேற்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட பாலவாடி, சோமனஹல்லி, பேட்றஅள்ளி உள்ளிட்ட பல்வேறு ஊராட்சிகளில் அதிமுக நிர்வாகிகளை புதியதாக பொறுப்பேற்ற தருமபுரி அதிமுக கிழக்கு மாவட்ட செயலாளர் மருத்துவர் அசோகன் நேரில் சந்தித்து அவர்களுக்கு சால்வை அணிவித்து வாழ்த்துக்களை பெற்றார். பின்னர் பேசிய அவர் அதிமுக என்பது ஆலமரம் அதில் சில இலைகள் விழ தான் செய்யும், ஆனால் பல இலைகள் துளிர்க்கும் அது போல தான் அதிமுகவும் என தெரிவித்தார். தற்போது விஜய் ஆட்சி சினிமா மோகத்தால் வந்தது. எம்ஜிஆர், அம்மாவின் கரத்தை வலுப்படுத்தியது போல், கழக பொதுச்செயலாளர் எடப்பாடியார் கரத்தையும் வலுப்பெற அனைவரும் பாடுபட வேண்டும் என நிர்வாகிகளை கேட்டுக்கொண்டார்.

## கன்னியாகுமரி அருகே

# ரயில்வே தண்டவாளத்தில் அடையாளம் தெரியாத வாலிபர் சடலமாக மீட்பு

## ரயில்வே போலீசார் விசாரணை

கன்னியாகுமரி, ஜூலை. 24

கன்னியாகுமரி அருகே தாமரைக்குளம் ரயில்வே தண்டவாளத்தில் நேற்று காலை சுமார் 7.30 மணி அளவில், அடையாளம் தெரியாத வாலிபர் ஒருவர் உயிரிழந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டார். சம்பவம் தொடர்பாக ரயில்வே போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணையை தொடங்கியுள்ளனர்.

உயிரிழந்தவர் சுமார் 30 முதல் 35 வயதுடையவராக இருக்கலாம் என காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். அவர் கருப்பு நிற டிஷர்ட் அணிந்திருந்ததாகவும், முகம் மற்றும் உடல் முழுவதும் கடுமையாக சிதைந்த நிலையில் இருந்ததாகவும் முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து, நாகர்கோயில் ரயில்வே காவல் நிலைய காவல் ஆய்வாளர் விஜயகுமார் தலைமையிலான போலீஸ் குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று உடலை மீட்டனர். பின்னர், உடல் பிரேதப் பரிசோதனைக்காக ஆம்புலன்ஸ் மூலம் குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

உயிரிழந்தவர் யார்? என்பது இதுவரை உறுதி செய்யப்படவில்லை. அவரது அடையாளத்தை கண்டறியும் பணியில் காவல்துறையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். மேலும், உயிரிழந்தவர் கேரளமாநிலத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சம்பவம் தொடர்பான அனைத்து கோணங்களிலும் விசாரணை நடைபெற்று வருவதாக ரயில்வே காவல்துறை தெரிவித்துள்ளது. பிரேதப் பரிசோதனை அறிக்கையும், விசாரணையில் கிடைக்கும் தகவல்களும் உயிரிழப்புக்கான சூழ்நிலைகளைத் தெளிவுபடுத்தும் என அதிகாரிகள் கூறினர்.




# உலக இரத்தக் கொடையாளர் தினம்

தென்காசி, ஜூலை.24

உலக இரத்தக் கொடையாளர் தினத்தை முன்னிட்டு தென்காசி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் இரத்தக் கொடையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. பிறரின் உயிரைக் காக்கும் உன்னதப் பணியில் ஈடுபட்டு வரும் கொடையாளர்களின் தியாகத்தைப் போற்றும் வகையில் இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சியின் தொடக்கமாக குருதிக்கொடை அளிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் அனைவரும் விழிப்புணர்வு உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர். தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வில் தென்காசி சார் ஆட்சியர் வைஷ்ணவி பால் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு இரத்தக் கொடையாளர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கிச் சிறப்பித்தார். நிகழ்ச்சியில் சான்றிதழ்களை வழங்கிய சார் ஆட்சியர் பேசுகையில் இரத்தம் கொடுத்து பிறரைக் காப்பது என்பது ஒரு மிக உயர்ந்த சேவை மனப்பான்மையாகும். இத்தகைய சேவை மனப்பான்மையுடன் செயல்படுவதற்கு நல் மனமும் சிறிது நேரமும் இருந்தால் மட்டுமே போதுமானது. இதன் மூலம் ஆபத்தான சூழலில் இருக்கும் ஏராளமான பொதுமக்களின் உயிர்களைக் காப்பாற்ற முடியும் என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார். இந்நிகழ்ச்சியில் அதிக முறை இரத்த தானம் செய்த காவலர் கார்த்திக் பாண்டியன், பத்திரிக்கை நிருபர் குற்றால பெருமாளுக்கு சிறந்த இரத்த கொடையாளருக்கான சான்றிதழ் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மருத்துவமனை அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் ஏராளமான ரத்தக் கொடையாளர்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.




# ஜனநாயகன் திரைப்படக் கொண்டாட்டத்துடன் சமூகப் பொறுப்பையும் விதைக்கும் புதிய முயற்சி

## RD கனிமொழி சந்தோஷ் MLA முன்னெடுப்பு

கோவை ஜூலை:24

ஜனநாயகனைக் கொண்டாடுவோம் பொறுப்புள்ள நாயகனாக மாறுவோம் "ஜனநாயகன் பாஸ்போர்ட்" மக்கள் விழிப்புணர்வு இயக்கத்தை தொடங்கினார் எம்.எல்.ஏ. கனிமொழி சந்தோஷ் தளபதி, மக்கள் முதல்வர் விஜய் நடித்துள்ள "ஜனநாயகன்" திரைப்படத்தின் வெளியீட்டை முன்னிட்டு, திரைப்படக் கொண்டாட்டத்தை சமூகப் பொறுப்புணர்வுடன் இணைக்கும் வகையில், கவுண்டம்பாளையம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கனிமொழி சந்தோஷ் "ஜனநாயகன் பாஸ்போர்ட்" என்ற மக்கள் விழிப்புணர்வு இயக்கத்தை தொடங்கினார்.

"ஜனநாயகனைக் கொண்டாடுவோம் பொறுப்புள்ள நாயகனாக மாறுவோம்" என்ற முழக்கத்துடன் தொடங்கப்பட்ட இந்த இயக்கம், திரைப்படத்தை வெறும் பொழுதுபோக்காக மட்டும் பார்க்காமல், அதன் மூலம் சமூகத்தில் ஒவ்வொரு குடிமகனும் தனது ஜனநாயக மற்றும் சமூகப் பொறுப்புகளை உணர்ந்து செயல்பட வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த "ஜனநாயகன் பாஸ்போர்ட்" மூலம் சாலை பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தூய்மையான சூழல், மனிதநேயம், சட்டங்களை மதித்தல், பொது இடங்களைப் பாதுகாத்தல், சமூக ஒற்றுமை உள்ளிட்ட பொறுப்பு மிக்க குடிமகனின் அடிப்படை கடமைகள் குறித்து உறுதிமொழி எடுக்க மக்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். திரையில் ஜனநாயகன் சமூகத்தில் பொறுப்புள்ள நாயகன்" என்ற சிந்தனையை மக்களிடம் கொண்டு சேர்த்து, பொறுப்புணர்வும் சமூக அக்கறையும் கொண்ட குடிமக்களை உருவாக்குவதே இந்த முன்னெடுப்பின் முக்கிய நோக்கமாகும். இந்த நிகழ்ச்சியில் ஏராளமான திரைப்பட ரசிகர்கள் மற்றும் பொதுமக்கள் உற்சாகமாக பங்கேற்று, பொறுப்புள்ள குடிமகனாக செயல்பட உறுதிமொழி ஏற்றனர்.




ஈரோடு மாவட்டம், பெருந்துறை நகராட்சி, சக்தி திருமண மண்டபத்தில் நேற்று நடைபெற்ற தூய்மை பணியாளர் மற்றும் அவர்களது குடும்பத்தினர்களுக்கான அரசு சேவைகள் மற்றும் நலத்திட்ட முகாமில் தூய்மைப் பணியாளர்களுக்கு தூய்மைப் பணியாளர் நலவாரிய உறுப்பினர் அடையாள அட்டையினை மாவட்ட ஆட்சியர் ச. கந்தசாமி வழங்கினார். உடன் மாவட்ட மேலாளர் (தாட்கோ) சீ.முருகவேல், பெருந்துறை நகராட்சி ஆணையாளர் (பொ) கருணாம்பாள், நகர்மன்றத் தலைவர் ராஜேந்திரன் உட்பட பலர் உள்ளனர்.

# அரசியலில் அசைக்க முடியாத ஆளுமையாக உருவெடுத்துள்ளார் முதல்வர் விஜய்

## ஜனநாயகம் ரிலீஸ் குறித்து முத்துக்குமார் பெருமிதம்



நாகர்கோவில்: ஜூலை 24

ஜனநாயகம் திரைப்படம் வெளியான பிறகு முதலமைச்சர் விஜய் அவர்கள் எம்.ஜி.ஆர், என்.டி.ஆர் போன்ற அரசியல் தலைவர்களின் வரிசையில் வைத்து பார்க்கிற அளவிற்கு உயர்ந்துள்ளார் என்று அகில இந்திய தமிழர் கழகத்தின் நிறுவனர் முத்துக்குமார் தெரிவித்துள்ளார். மேலும் அவர் கூறியதாவது:

ஜனநாயகம் திரைப்படம் பெரும் நெருக்கடிக்கிடையே குறிப்பிட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்கள் கழிந்தே வெளியாகியுள்ளது. அதுவும் விஜய் முதலமைச்சரான பிறகு தான் வெளியாகியுள்ளது. முதல்வர் விஜயின் கடைசி திரைப்படம் என்பதால் ஜனநாயகம் ரிலீஸ் தமிழகத்தில் திருவிழா போன்றே கொண்டாடப் பட்டு வருகிறது.

ஜனநாயகம் திரைப்படம் வெளியான பிறகு மக்கள் முதல்வர் விஜயை உயர்ந்த இடத்தில் வைத்து அழகு பார்க்க தொடங்கிவிட்டார்கள். எம்.ஜி.ஆர் முதலமைச்சரான பிறகு தான் 1977 ல் மீனவ நண்பன் என்கிற திரைப்படமும், அடுத்து மதுரை மீட்ட சுந்தரபாண்டியன் திரைப்படமும் வெளியாகியிருந்தது.

அது போலவே ஆந்திரா முதல்வராக இருந்த என்.டி.ஆரின் திரைப்படமும் வெளியாகியிருந்தது. அந்த வரிசையில் முதல்வர் விஜய்யின் ஜனநாயகம் திரைப்படமும் வெளி வந்துள்ளதால் மக்களும் முதல்வர் விஜய்யை, எம்.ஜி. ஆர், என்.டி.ஆர் போன்ற அரசியல் தலைவர்களின் வரிசையில் வைத்து அழகு பார்க்க தொடங்கி விட்டார்கள். தமிழக அரசியல் வரலாற்றில் அசைக்க முடியாத ஆளுமையாக முதலமைச்சர் விஜய் உருவெடுத்து வருகிறார். அவருக்கு மக்கள் பலமும் அதிகரித்து கொண்டே தான் இருக்கிறது.

இவ்வாறு முத்துக்குமார் கூறியுள்ளார்.



# தருமபுரியில் ஸ்ரீ சக்தி சொர்ண முத்து மாரியம்மன் கோவில் 37 ம் ஆண்டு திருவிழா

தருமபுரி ஜூலை 22

தருமபுரி நகரில் எஸ்.வி.ரோடு குப்பையன் தெருவில் உதயமரத்தடியில் அமைந்துள்ள ஸ்ரீ சக்தி சொர்ண முத்து மாரியம்மன் திருக்கோவிலின் 37 ம் ஆண்டு திருவிழாவை முன்னிட்டு அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், ஆராதனைகள் , பூஜைகள் செய்யப்பட்டு சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சியளித்தார். இதனை தொடர்ந்து பக்தர்கள் பூ கரகம், தீச்சட்டி, மாவிளக்கு ஆகியவைகளை ஊர்வலமாக எடுத்து வந்தனர். இந்த ஊர்வலம் எஸ். வி. ரோடு, வெளிப்பேட்டை தெரு, காந்தி சிலை வழியாகதிருக்கோவிலைசென்றடைந்தது. பிறகு அம்மனுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இதில் நகரப் பகுதியில் இருந்து ஏராளமான பொதுமக்கள், பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை வழிபட்டனர் . திருக்கோவில் சார்பில் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இரவு மஞ்சள் நீராட்டு விழா மற்றும் கும்ப பூஜை நடைபெற்றது.

# அசைக்க முடியாத சக்தியாக உருவாகியுள்ள முதல்வர் விஜய்

## ஜனநாயகம் ரிலீஸ் குறித்து சமூக நுகர்வோர் மாநில பொதுச் செயலாளர் டாக்டர்.சந்திரமோகன் கருத்து



கிருஷ்ணகிரி: ஜூலை24

நடிகர் விஜய்யின் கடைசி திரைப்படமாக வெளியாகி உள்ள ஜனநாயகன் தமிழகம் முழுவதும் நேற்று தியேட்டரில் திருவிழாபோல ஓடிக் கொண்டிருக்கிறது. ஜனநாயகம் திரைப்படம் வெளியான பிறகு முதலமைச்சர் விஜய் எம்.ஜி.ஆர், ஜெயலலிதா போன்ற அரசியல் தலைவர்களின் வரிசையில் உயர்ந்துள்ளார் என்றும், அதிகாலை முதல் ரசிகர்களின் கொண்டாட்டம், சோசியல் மீடியா விமர்சனங்கள், அரசியல் விவாதம் என படம் பற்றி தொடர்ந்து பேசப்பட்டு வரும் நிலையில் சமூக நுகர்வோர் நல்ல பாதுகாப்பு சங்க மாநில பொதுச் செயலாளர் டாக்டர் சந்திர மோகன் கருத்து தெரிவித்துள்ளார். மேலும் அவர் கூறியதாவது:

ஜனநாயகம் திரைப்படம் பெரும் அரசியல் நெருக்கடிக்கிடையே பல மாதங்கள் போராட்டத்திற்குப் பின் நேற்று வெளியாகியுள்ளது. அதுவும் நடிகர் விஜய், முதலமைச்சர் விஜய் ஆக பதவி ஏற்ற பிறகு தான் வெளியாகியுள்ளது. முதல்வர் விஜயின் கடைசி திரைப்படம் என்பதால் ஜனநாயகம் ரிலீஸ் தமிழகத்தில் திருவிழா போன்றே கொண்டாடப்பட்டு வருகிறது. ஜனநாயகம் திரைப்படம் வெளியான பிறகு மக்கள் முதல்வர் விஜயை உயர்ந்த இடத்தில் வைத்து பொதுமக்களும், ரசிகர்களும், அரசியல் பிரபலங்களும், அழகு பார்க்க தொடங்கி விட்டார்கள். எம்.ஜி.ஆர் முதலமைச்சரான பிறகுதான் 1977 ல் மீனவ நண்பன் என்கிற திரைப்படமும், அடுத்து மதுரை மீட்ட சுந்தர பாண்டியன் திரைப்படமும் வெளியாகியிருந்தது. அது போலவே ஆந்திரா முதல்வராக இருந்த என்.டி.ஆரின் திரைப்படமும் வெளியாகியிருந்தது. அந்த வரிசையில் முதல்வர் விஜய்யின் ஜனநாயகம் திரைப்படமும் வெளி வந்துள்ளதால் மக்களும் முதல்வர் விஜய்யை, எம்.ஜி.ஆர், என்.டி.ஆர், ஜெயலலிதா போன்ற அரசியல் தலைவர்களின் வரிசையில் பார்க்க தொடங்கி விட்டார்கள். தமிழக அரசியல் வரலாற்றில் அசைக்க முடியாத ஆளுமையாக முதலமைச்சர் விஜய் உருவெடுத்து வருகிறார். அவருக்கு மக்கள் பலமும் அதிகரித்து கொண்டே தான் இருக்கிறதாகவும், லஞ்ச லாவண்யம் பெருக்கெடுத்த அரசு அலுவலகங்களில் தற்போது சற்று குறைந்துள்ளதாகவும், மேலும் தேர்தல் வாக்குறுதிகளான மகளிருக்கு மாதம் 2500 ரூபாயும், வேலையில்லா பட்டதாரிக்கு மாதம் ரூபாய் 4000 கொடுத்தால் முதல்வர் விஜய்யை எந்த சக்தியாலும் வீழ்த்த முடியாது எனவும் கூறினார்.

# கொளத்தூரில் பச்சையம்மன் கோவில் வருஷாபிஷேக விழா; பெண்கள் பால்குடம் எழுத்து வழிபாடு



தருமபுரி ஜூலை 24

தருமபுரி மாவட்டம் கொளத்தூரில் உள்ள ஸ்ரீ பச்சையம்மன் கோயில் 10 ம்ஆண்டு வருஷாபிஷேக விழா நடைபெற்றது.

இந்த விழாவையொட்டி அம்மனுக்கு சிறப்பு வழிபாடு நடைபெற்றது. பின்னர் கணபதி பூஜை உடன் வேதமந்திரங்கள் முழங்க யாகசாலை பூஜைகள் நடைபெற்றது. இதை தொடர்ந்து 50க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த பக்தர்கள், பொது மக்கள் ஒன்றிணைந்து அம்மை வேள்வி நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர் . பின்னர் கொளத்தூர் விநாயகர் கோவிலிருந்து ஏராளமான பெண்கள் பால்குடம் எடுத்துக் கொண்டு ஊர்வலமாக வந்து நேர்த்திக்கடன் செலுத்தினர். இந்த ஊர்வலம் முக்கிய வீதிகள் வழியாக கோவிலை வந்து அடைந்தது.

அம்மனுக்கு சிறப்பு பால் அபிஷேகம், திருக்குட நீராட்டு, சிறப்பு அலங்காரம், மகா தீபாராதனை நடைபெற்றது. இந்த விழாவில் பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை வழிபட்டனர். திருக்கோவில் சார்பில் பக்தர்களுக்கு சிறப்பு பிரசாதம் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.



தருமபுரி மாவட்டம் பென்னாகரம் வட்டம் பாப்பாரப்பட்டி ஒன்னப்பகவுண்டன அள்ளி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் கட்டுப்பாட்டில் உள்ள விடுதலை போராட்ட வீரர் தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டபத்தில் விடுதலைப் போராட்ட வீரர் தியாகி சிவசுப்பிரமணிய சிவா அவர்களின் 101 வது நினைவு நாளை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் மாவட்ட ஆட்சியர் சரவணன் மலர்மாலை வைத்தும், அவரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவியும் மரியாதை செலுத்தினார். இதில் பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் கஜேந்திரன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் லோகநாதன், பாப்பாரப்பட்டி பேரூராட்சி தலைவர் பிருந்தா நடராஜன், பென்னாகரம் பேரூராட்சி தலைவர் வீரமணி, பென்னாகரம் வட்டாட்சியர் ஆறுமுகம் உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கேரளாவிற்கு எம்சாண்ட் கடத்த முயன்ற 4 கனிமவள வாகனங்கள் பறிமுதல்

நாகர்கோவில், ஜூலை.24

கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் உத்தரவின் பேரில், மாவட்டம் முழுவதும் சட்ட விரோத கனிம வளக் கடத்தல்களை தடுக்கும் வகையில் காவல்துறையினர் தீவிர கண்காணிப்பு மற்றும் வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன் தொடர்ச்சியாக, மார்த்தாண்டம் உக்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் சங்கர் கணேஷ் மேற்பார்வையில் நடந்த சோதனையில் கொல்லங்கோடு, களியக்காவிளை காவல் நிலைய எல்லைகளில் ஆவணங்கள் இன்றி டிப்பர் வாகனங்களில் எம்சாண்ட் ஐ கேரள மாநிலத்திற்கு சட்டவிரோதமாக கடத்தியது கண்டறியப்பட்டது. இதனைத் தொடர்ந்து கொல்லங்கோடு, களியக்காவிளை காவல் நிலையங்களில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 4 டிப்பர் வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

# ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள பூங்கா பராமரிப்பின்றி அவலம்: பகலிலேயே கொசு தொல்லை – நடவடிக்கை எடுக்குமா மாநகராட்சி?



ஈரோடு, ஜூலை 24:

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள பொதுமக்கள் பயன்பாட்டிற்கான பூங்கா முறையான பராமரிப்பு இன்றி காணப்படுவதாக பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

பூங்காவில் செடிகள் மற்றும் புற்கள் அடர்ந்து வளர்ந்துள்ளதுடன், பல இடங்களில் தூய்மைப் பணிகளும் மேற்கொள்ளப் படாமல் இருப்பதாக கூறப்படுகிறது. இதனால் அங்கு கொசுக்கள் அதிகளவில் உருவாகி, பகலிலேயே கொசு தொல்லை நிலவுவதாக அலுவலகத்திற்கு வரும் பொதுமக்கள் மற்றும் ஊழியர்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு தினமும் ஏராளமான பொதுமக்கள் பல் வேறு கோரிக்கைகளுக்காக வருகை தரும் நிலையில், பூங்கா மற்றும் அதன் சுற்றுப்புறத்தை சுத்தமாக பராமரிப்பதுடன், கொசு ஒழிப்பு நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்த வேண்டும் என சமூக ஆர்வலர்களும், பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே, சம்பந்தப்பட்ட மாநகராட்சி நிர்வாகம் உடனடி ஆய்வு மேற்கொண்டு, பூங்காவை சீரமைத்து, கொசு மருந்து தெளித்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளைவிரைந்து மேற்கொள்ள வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# போச்சம்பள்ளி செயற்பொறியாளர் அலுவலகம் முன்பு ஒற்றை கோரிக்கை மின்வாரிய ஒப்பந்த ஊழியர்களுக்கு பணி நிரந்தரம் மற்றும் முதல்வர் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்



கிருஷ்ணகிரி ஜூலை 24.

போச்சம்பள்ளி செயற்பொறியாளர் அலுவலகம் முன்பு ஒற்றை கோரிக்கை மின்வாரிய ஒப்பந்த ஊழியர்களுக்கு பணி நிரந்தரம் மற்றும் முதல்வர் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

கிருஷ்ணகிரி மாவட்டம்போச்சம்பள்ளி மின்வாரிய செயற்பொறியாளர் அலுவலகம்முன்தொடர்வேலைநிறுத்தப் போராட்டம் நடந்தது. மாவட்ட தலைவர் மணிவேல்தலைமைவகித்தார்.போராட்டத்தில்,'தமிழ்நாடுமின்வாரியத்தில்,70,000 காலி பணியிடங்கள் நிலுவையில் உள்ள நிலையில்,கடந்த,5முதல்,20ஆண்டுகளாக பணியாற்றிவரும்ஒப்பந்தஊழியர்களுக்கு பணி நிரந்தரம் வழங்க வேண்டும். 1998 ஜன., 1 முதல், 2008 வரை விடுபட்ட பி.சி. பி., சி.எச்.ஐ.டி.டி.யு., மற்றும் ஏ.இ., சான்றிதழ் வைத்துள்ள ஊழியர்களை அடையாளம் கண்டு நேரடி நியமனம் வழங்க வேண்டும். ஐ.எல்.ஓ., வழக்கில் வெற்றி பெற்று பணி ஆணை வைத்திருக்கும், 6,788 நபர்களுக்கு நிலுவை தொகையுடன் பணி ஆணை வழங்க வேண்டும். கே2 ஒப்பந்த ஊழியர்கள் மற்றும் அனைத்து அனல் மின் மற்றும் நீர்மின் உற்பத்தி நிலைய ஒப்பந்த ஊழியர்களுக்கு பணி நிரந்தரம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர். இதில், 100 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



# டெல்லி மாணவர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து திருப்பரங்குன்றத்தில் மாணவர் அமைப்பினர் ரயில் மறியல் போராட்டம்: 100க்கும் மேற்பட்டோர் கைது

மதுரை, ஜூலை 24

நீட் தேர்வு முறைகேடு வினாத்தாள் கசிந்தது தொடர்பாக மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வலியுறுத்தியும் நீட் தேர்வை விளக்க கோரியும் டெல்லியில் சிஜேபினர் மற்றும் மாணவர்கள் அமைப்பினர் கடந்த 25 நாட்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு ஆதரவு தெரிவித்தும், இந்த போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தாக்கப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்தும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு ஒரு கோடி ரூபாய் இழப்பீடு வழங்க வலியுறுத்தியும் இந்திய ஜனநாயக மாணவர் சங்கத்தினர் இந்தியா ஜனநாயக வாலிபர் சங்கத்தினர், விவசாய சங்கத்தினர் உள்ளிட்ட சில அமைப்புகள் சேர்ந்து திருப்பரங்குன்றம் ரயில் நிலையத்தில் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

டெல்லியில் நடைபெறும் மாணவர், இளைஞர்கள் போராட்டத்தை ஆதரித்து நாடு முழுவதும் ஆதரவு இயக்கம் நடத்த வர்க்க வெகுஜன அமைப்புகள் முடிவு செய்துள்ளனர். அதன் அடிப்படையில் திருப்பரங்குன்றத்தில் ரயில் மறியல் போராட்டத்தை மாணவர் அமைப்பினர் முன்னெடுத்துள்ளனர்.

திருப்பரங்குன்றம் காவல்நிலைய முன்பு தொடங்கிய போராட்டத்திற்காக தெற்கு காவல் துணை ஆணையர் இனிகோ திவ்யன் தலைமையில் போலீசார் குவிக்கப்பட்டு ரயில் நிலையம் ரயில்வே தண்டவாளம் செல்லும் பாதைகளில் தடுப்புகள் கொண்டு அடைக்கப்பட்டுள்ளன. மேலும் ரயில் நிலையம் முழுவதும் போலீசார் பலத்த பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் போராட்டக்காரர்கள் தடுப்புகளை தகர்த்துவிட்டு ரயில்வே தண்டவாளம் நோக்கி வந்தனர் அப்போது ரயில் நிலையம் அருகில் வைத்து போலீசார் தடுத்தனர்.

பின்னர் பாலக்காட்டில் இருந்து மதுரை வழியாக திருச்செந்தூர் செல்லும் ரயிலில் ஏறி வந்த மாணவர்கள் திருப்பரங்குன்றம் ரயில் நிலையத்தில் இறங்கி ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ரயில் முன்பு தண்டவாளத்தில் அமர்ந்து மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர் இதனால் பரபரப்பான சூழல் ஏற்பட்டது. பின்னர் போலீசார் தண்டவாளத்தில் படுத்திருந்த ஒவ்வொருவராக குண்டு கட்டாக தூக்கி தண்டவாளத்தில் இருந்து அப்புறப்படுத்தினர் இதில் மாணவர்கள் சட்டை கிழிந்து போலீசாரிடம் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

பத்து நிமிடப் போராட்டத்திற்குப் பிறகு ரயில் மறியலில் ஈடுபட்டவர்களை காவல் துறையினர் வெளியேற்றியதை தொடர்ந்து திருப்பரங்குன்றம் ரயில் நிலையத்தில் இருந்து பாலக்காடு திருச்செந்தூர் ரயில் புறப்பட்டது.

தொடர்ந்து ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட 24 மாணவர்கள் 12 மாணவிகள் 8 மாதர் சங்கத்தினரை போலீசார் கைது செய்தனர். அதேபோல் திருப்பரங்குன்றம் காவல் நிலையம் முன்பு போராட்டத்தில் ஈடுபட்ட 65க்கும் மேற்பட்டோர் கைது.



# நீட் தேர்வை ரத்து செய்ய கோரி ஈரோடு திருப்பூர் குமரன் சிலை அருகே தோட்டத்தில் ஈடுபட்ட மாணவர் அமைப்பினர் கைது

ஈரோடு ஜூலை 24

நீட் தேர்வை ரத்து செய்ய கோரியும், மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக கோரியும் நாடு முழுவதும் மாணவர் அமைப்பினர் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், டெல்லி மற்றும் சென்னையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டதை கண்டித்து, ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் உள்ள குமரன் சாலையில், தியாகி திருப்பூர் குமரன் சிலை அருகில் இந்திய மாணவர் சங்கத்தைச் சேர்ந்த அமைப்பினர் திடீரென சாலையில் அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்றும், மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் என்றும் வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர்.

இதைத் தொடர்ந்து, போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களை போலீசார் குண்டுகட்டாக அப்புறப்படுத்தி, இதில் ஈடுபட்ட 27 பேரையும் கைது செய்தனர்.



# மத்திய அமைச்சர் பதவி விலக கேட்டு மாணவர் அமைப்புகள் காத்திருப்பு போராட்டம்

நாகர்கோவில், ஜூலை. 24

நாகர்கோவிலில் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் மற்றும் இந்திய மாணவர் சங்கத்தினர் இணைந்து அண்ணா ஸ்டேடியம் முன்பு மத்திய அமைச்சர் பதவி விலக வேண்டும் என கேட்டு காத்திருப்பு ரத்தத்தில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டத்திற்கு எஸ்எப்ஐ மாவட்ட செயலாளர் சந்துரு தலைமை வகித்தார். துணை தலைவர் காவியா , துணைத் தலைவர் பிரவீன் பேசினர். மாவட்ட பொருளாளர் விஷ்ணு நிறைவுரையாற்றினார். இதழ் கலந்து கொண்ட போராட்டக்காரர்கள் நீட் தேர்வை முறையாக நடத்த தவறிய தேசிய தேர்வு முகமைக்கு எதிராகவும், தார்மீக பொறுப்பேற்று ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் உடனடியாக பதவி விலக வேண்டும் என்று கூறி முழக்கங்களை எழுப்பினர்.

வருவாய் கோட்டாசியர் அவர்கள்
திருப்பூர் மாவட்டம்.
நாள்:21.07.2026
ஒ.மு.3051/2026/ஆ2

திரு. சிவகுரு
க.எண்:44/2
காஞ்சி நகர் 2வது வீதி
ராக்கியாபாளையம்.
திருப்பூர் மாவட்டம்.
பார்வை: மனுதாரர் திருமதி. தனபாக்கியம் என்பவர் மனு நாள்:10.06.2026.

மனுதாரர்.

இல்லை.

எதிர் மனுதாரர்.

பொது அறிவிப்பு

மேற்கண்ட முகவரியில் வசிக்கும் திரு. சிவகுரு என்பவரது( தாய் வழி) தனது தாத்தா திரு. கந்தசாமி என்பவர். கடந்த 09. 10. 2016. அன்று மேற்படி முகவரியில் இறந்தது தொடர்பாக, இறப்பினை அந்நேரத்தில் பதிவுசெய்யதவறிய நிலையில் கால தாமதக் கட்டணத்துடன் இறப்பு சான்று பதிவுசெய்துதரவேண்டிவருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு செய்துள்ளார். இம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை ஏதேனும் இருப்பின் இந்த அறிவிப்பு பிரதி வெளியான 15. நாட்களுக்குள் கனம் வருவாய் கோட்டாட்சியர் முன்பு நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளவேண்டியது அவசியம். தவறும் பட்சத்தில் தீர்ப்பு ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

மனுதாரர்,
திரு. சிவகுரு.
க.எண்:44/2
காஞ்சி நகர் 2வது வீதி
ராக்கியாபாளையம்.
திருப்பூர் மாவட்டம்.

வருவாய் கோட்டாசியர் அவர்கள்
திருப்பூர் மாவட்டம்.
நாள்:24.07.2026
ஒ.மு.3517/2026/ஆ2

திரு. பாலசுப்பிரமணியம்.
க.எண்:5/399
தங்கம்மன் லேஅவுட்.
வெங்கமேடு.
அய்யன் காளிபாளையம்,
திருப்பூர் மாவட்டம்.
பார்வை: மனுதாரர் திரு. பாலசுப்பிரமணியம் என்பவர் மனு நாள்:03.07.2026.

மனுதாரர்.

இல்லை.

எதிர் மனுதாரர்.

பொது அறிவிப்பு

மேற்கண்ட முகவரியில் வசிக்கும் திரு. பாலசுப்பிரமணியம் என்பவரது தனது தாயார் திருமதி. பழனாத்தாள் என்பவர். கடந்த 14.12. 2005. அன்று மேற்படி முகவரியில் இறந்தது தொடர்பாக, இறப்பினை அந்நேரத்தில் பதிவு செய்ய தவறிய நிலையில் கால தாமதக் கட்டணத்துடன் இறப்பு சான்று பதிவு செய்து தர வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு செய்துள்ளார். இம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை ஏதேனும் இருப்பின் இந்த அறிவிப்பு பிரதி வெளியான 15. நாட்களுக்குள் கனம் வருவாய் கோட்டாட்சியர் முன்பு நேரில்ஆஜராகிஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது அவசியம். தவறும் பட்சத்தில் தீர்ப்பு ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும்என்பதைஅறியவும்.

மனுதாரர்,
திரு. பாலசுப்பிரமணியம்.
க.எண்:5/399
தங்கம்மன் லேஅவுட்.
வெங்கமேடு.
அய்யன் காளிபாளையம்,
திருப்பூர் மாவட்டம்.

# திருவண்ணாமலை, வேங்கிக் கால் டாஸ்மாக் கடைகளை மூடக் கோரி சென்னை டாஸ்மாக் இயக்குநரகம் முற்றுகை போராட்டம்




சென்னை, ஜூலை 24,

திருவண்ணாமலை மாவட்ட வேங்கிக் காலில் அரசு மதுபானக்கடை எண் 9246 மற்றும் காமராஜர் சிலை எதிரில் இயங்கும் கடை எண் 9481 ஆகிய கடைகளை நிரந்தரமாக மூடக்கோரியும், திருவண்ணாமலை மாவட்ட மதுபான மேலாளர் வசுந்தா தேவி, கடை எண் 9246, மேற்பார்வையாளர் சங்கர், கடை எண் 9481ன் மேற்பார்வையாளர் சங்கர் ஆகியோரை பணிநீக்கம் செய்ய வலியுறுத்தியும் சென்னை எழும்பூர் அரசு மதுபான நிர்வாக இயக்குநர் அலுவலகம் அருகில் தலித் விடுதலை இயக்கம் மாநில தலைவர் ச.கருப்பையா தலைமையில் ஆர்பாட்டம் நடைபெற்றது.

விடுதலை இயக்க திருவண்ணாமலை மாவட்டச் செயலாளர் ஜெயக்கொடி முன்னிலையில்நடைபெற்ற ஆர்பாட்டத்தை 14 இயக்கம் மாநில தலைவர் தீவு திடல் சசிகுமார் துவக்கி வைத்தார்.

தலித் விடுதலை இயக்கம் மாநில இணை பொதுச் செயலாளர் கதிர்காமன், மக்கள் சட்ட உரிமை இயக்கம் மாநில தலைவர் அண்ணாத்துரை, மது ஒழிப்பு போராளி இராமதாசு, ஏப்ரல் 14இயக்கம் சரசு, சென்னை உயர் நீதிமன்றம் வழக்கறிஞர் இராமராசன் மற்றும் பல்வேறு முற்போக்குவாதிகளும் கண்டன உரையாற்றினார்கள்.

# நீதிமன்ற உத்தரவை மதிக்காத வருவாய்த்துறை. திருப்பூர் அரசுப் பள்ளி நிலத்தை மீட்க 3 நாட்கள் கெடு. போராட்டத்தை அறிவித்த திமுக கவுன்சிலர்



திருப்பூர் ஜூலை:24

மாநகராட்சிக்கு உட்பட்ட 8வது வார்டு போயம் பாளையம், நேரு நகர் பகுதியில், அரசுப் பள்ளிக்கு சொந்தமான நிலத்தை தனி நபர் ஆக்கிரமித்துள்ளதாகவும், அதனை உடனடியாக மீட்டு பள்ளிக்கு ஒப்படைக்க வேண்டும் என திமுக கவுன்சிலர் வேலம்மாள் காந்தி மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்துள்ளார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசுகையில், போயம் பாளையம் நேரு நகர் பகுதியில் உள்ள பள்ளி நிலத்தை கொண்டாசாமி என்பவர் ஆக்கிரமித்து வைத்துள்ளார். இந்த ஆக்கிரமிப்பை எதிர்த்து கடந்த 30 ஆண்டுகளாக சட்டப் போராட்டம் நடைபெற்று வருகிறது. கடந்த 5 ஆண்டுகளாக அப்பகுதியில் கவுன்சிலர், வேலம்மாள் காந்தி வருவாய்த்துறை அதிகாரிகளை 546 முறை நேரடியாகச் சந்தித்து மனு அளித்துள்ளார். இருப்பினும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததால், கடந்த 2 ஆண்டுகளாகத் தீவிரமாக நடத்தப்பட்ட சட்டப் போராட்டத்தின் விளைவாக நீதிமன்றம் 'இது முழுக்க முழுக்க அரசு சொத்து' என்று தெளிவான தீர்ப்பை வழங்கியது." நீதிமன்ற நீதிமன்ற தீர்ப்பு வந்து4மாதங்கள்ஆகியும்வருவாய்த்துறை அதிகாரிகள் ஆக்கிரமிப்பை அகற்ற எந்த நடவடிக்கையும் எடுக்காமல் காலம் தாழ்த்தி வருகின்றனர். அப்பள்ளியில் தாய், தந்தை இல்லாத 51 க்கும் மேற்பட்ட ஆதரவற்ற குழந்தைகள் உட்பட ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்தகுழந்தைகள்பயின்றுவருகின்றனர். குழந்தைகளுக்கு போதிய கழிப்பிட வசதிகள் இல்லை. காலையில் இறைவணக்கக் கூட்டம் (Prayer) நடத்துவதற்குக் கூட இடம் இல்லாத இக்கட்டான நிலை நிலவுகிறது. மாநகராட்சி மாமன்றக் கூட்டத்திலும் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டுள்ள நிலையில், அதிகாரிகள்தொடர்ந்துஅலட்சியம்காட்டி வருகின்றனர். இந்த மனு மீது நடவடிக்கை எடுத்து 3 நாட்களுக்குள் ஆக்கிரமிப்பை அகற்றி நிலத்தைப் பள்ளிக்கு ஒப்படைக்க தவறினால், பொதுமக்களைத் திரட்டி வீதியில் இறங்கி மாபெரும் போராட்டம் நடத்துவோம் என தெரிவித்துள்ளார்.



# அப்துல் கலாம் விவசாயிகள் சங்கம் சார்பில் அனைத்து விவசாயிகளின் கூட்டுறவு கடனை தள்ளுபடி செய்ய கோரிக்கை விடுத்து தமிழ்நாடு அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்

கிருஷ்ணகிரி, ஜூலை 24

காரப்பட்டுதேசியநெடுஞ்சாலைபேருந்து நிலையம் அருகில் அப்துல் கலாம் விவசாயிகள் சங்கம் சார்பில் அனைத்து விவசாயிகளின்கூட்டுறவுகடனைதள்ளுபடி செய்ய கோரிக்கை விடுத்து தமிழ்நாடு அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அடுத்த காரப்பட்டு ஊராட்சியில் தேசிய நெடுஞ்சாலை பேருந்து நிலையம் அருகே டாக்டர் அப்துல்கலாம் விவசாய சங்கத்தின் சார்பாக விவசாயிகளின் பயிர் கடன்களை முழுமையாக ரத்து செய்யக் கோரிக்கை விடுத்து. பொன்னுசாமி. தலைமையில் தமிழ்நாடு அரசை கண்டித்து பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது நிகழ்வில் காரப்பட்டு முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் வஜ்ரம் என்ற செல்வராஜ். முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர். கண்ணன் மற்றும் முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர் அதிமுக தொழில்நுட்ப மாவட்ட பொறுப்பாளர் தொழிலதிபர் தீபக். ஆர். கே. எஸ்.ராஜா. முன்னாள் ஊராட்சி ஒன்றிய. குழு. தலைவர். பூபதி ஞானப்பிரகாசம் சங்கர் செந்தில்குமார் கருமாண்டபதி ஊராட்சி. மன்ற. முன்னாள்தலைவர்அருள். உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் திரண்டு கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.